1970 மார்ச் 31]

போக்குவரத்துக்கு எவ்வளவு ஆட்கள் இடைப்பார்கள் என்பதையும் பொறுத்திருக்கிறது. ஆகவே, அங்குள்ள தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்கள் விமான தளத்தை அமைக்கவேண்டும் என்று விண்ணப்பித்திருக்கிறார்களா? அதுபற்றி சர்வே செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனியார் விண்ணப்பங்கள் பற்றிய விவரக் குறிப்பு இப்பொழுது என்னிடத்தில் இல்லை. நம்முடைய அரசு வற்புறுத்தியிருக்கிறது. மீண்டும் வற்புறுத்தும்.

திரு. சி. வீரமணி : தலைவர் அவர்களே, சேலத்தில் விமான தளம் அமைக்க மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ஆகிறது? சங்ககிரியில் சேலம் தொழில்பேட்டை, தொழிற்சாலைகள் ஏற்படுத்திக் கொண்டு வருவதால், விமான நிலையம் முக்கியமானது என்ற அடிப்படையில் மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி உடனடியாகக் கொண்டு வர முனைவருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விமான தளத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நம் அரசு செய்து வருகிறது. ஏற்கனவே செய்திருக்கிறது. மீண்டும் வலியுறுத்தும். விமான தளம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய ரூ. 8 லட்சம் ஆகும் என்று மதிப்பீடு.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sometime back there was a proposal to construct airports in every district headquarters. May I know from the Hon. Minister whether that proposal is under consideration of Union Government or State Government?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விமான தளத்தை அமைத்தால் வரக்கூடிய வருமானம், ஏற்படக்கூடிய செலவு, போக்கு வரத்து வசதிகள் இவையெல்லாம் பரிசிலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டத்திற்கு ஒரு விமான நிலையம் என்பது பற்றிக் குறிப்பு இல்லை.

Rameswaram-Dhanushkodi road

* 619 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government propose to form a eight- mile long all-whether road from Rameswaram to Dhanushkodi;

(*b*) if so, at what cost; and

(*c*) when the work will start?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ-உ) இராமேஸ்வரம் நகரிலிருந்து தனுஷ்கோடிக்கு எல்லாக்கால நிலைமைகளிலும் செல்லக் கூடிய சரளைக்கல் சாலை ஒன்று ரூபாய் 21·06 லட்சம் செலவில் ஏற்கெனவே போடப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : சார். முன்பு ஒரு நாள் புயல் வீசியதே அப்பொழுது தனுஷ்கோடி பாழ் அடைந்து போனது என்று சொல்லப் பட்டிருக்கிறதே, அப்போழுது எதிர்க்கட்சியில் இருந்த கட்சிக்காரர்கள் அதைத் தடுக்க ஒரு சுவர் நீளமாக, ராமேசுவரத்திலிருந்து தனுஷ் கோடிக்கு கடற்கரையில் கட்டவேண்டும் என்று பிரசாரம் செய்து வந்தார்களே, அந்த யோசனை என்ன ஆனது இப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய சர்க்காரிடம் நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதையும் பரிசீலித்துக்கொண்டு இருக் கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி: இந்த ரோட்டுக்குக் கிட்டத்தட்ட 21 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். எத்தனை லட்சம் செலவழித்தாலும், ரோடு அமைத்த பிறகு அங்கே மணல் அடித்து மூடிவிடுகிறது. அதுதான் அங்கே பெரும் பிரச்னை. இரவில் ஒன்றுமில்லாமல், பகலில் பார்த்தால் மணல் மூடிவிடுகிறது. அதைத் தடுக்கத் திட்டம் இருக்கிறதா? சவுக்கு மரங்களை வைத்துத் தடுக்கலாம் என்கிற திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல, சில வகை மரங்களை வளர்ப்பது பற்றியும் பரிசீலனை செய்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம்.

Idols dug out at Veerapandi

* 620 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether a number of idols were dug out at Veerapandi in Madurai District in July, 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) ஆம்.

(இ) வீரபாண்டி கண்ணீஸ்வரமுடையார் கோவிலில் திருமண மண்டபம் ஒன்று கட்டுவதற்காக அடிக்கல் நாட்டும்போது, ஈஸ்வரர், ஈஸ்வரி, ஸ்கந்தர், நடராஜர், சிவகாமசுந்தரி, பீடம், சந்திரசேரர், அம்மன் ஆகிய எட்டு திருஉருவச் சிலைகள் கிடைக்கப்பெற்றன.

முற்பகல் 10-00

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இங்கே கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களையெல்லாம் கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, அங்குள்ள மக்களும் பக்தர்களும் கேட்டுக்கொண்டபடி, அந்தச் சிலைகள் தற்காலிகமாகக் கண்ணீஸ்வரமுடையார் கோயிலில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கான மற்ற வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்தச் சிலைகள் எல்லாம் எந்த உலோகத்தினால் செய்யப்பட்டவை ? அவைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு இருக்கும் ? அவை எந்த நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்தவை ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்தச் சிலைகள் எல்லாம் 'காப்பர் அன்ட் ப்ரான்ஸ்' என்ற இரண்டுவித உலோகங்களினால் செய்யப்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கோயில் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இந்தச் சிலைகளும் பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்குமோ என்று எண்ணுகிறார்கள். இடைக்காலத்தில் முஸ்லீம்கள் படையெடுத்த காலத்தில் சிலைகளைக் காப்பாற்றி வைக்கவேண்டுமென்ற எண்ணத்தினால் பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்டனவோ என்று கருதப்படுகிறது. அதற்குமேல் விவரங்கள் ஒன்றும் இதுவரை தெரியவில்லை.

திரு. ஆர். நாகசுந்தரம்: தலைவர் அவர்களே, விலையுயர்ந்த சிலைகள் எங்கு தோண்டியெடுக்கப்பட்டாலும், அங்கேயே ஒரு கோயிலை எழுப்பி அதில் வைத்துவிடுகிறார்கள். இனி எந்த இடத்தில் எடுத்தாலும் அவைகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்து, தொல்பொருள் காட்சிச்சாலையில் வைத்து, 'இந்தப் பொருள் இன்ன நாளில், இன்ன இடத்தில் கண்டெடுக்கப்பட்டது' என்ற விவரக் குறிப்புக்களை எழுதி வைத்துப் பாதுகாக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா ?